கழக வெளியீடு - ௯௰

ஸ்ரீசிவஞானசுவாமிகள்

அருளிய

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்



THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.

TINNEVELLY JULY 1927 & MADRAS

PRICE As. 3

கழக வெளியீடு - ௬௰

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்

ஸ்ரீ சிவஞான சுவாமிகள்
அருளியது

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை
பிரபவ௵ ஆடி௴

Published by

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited

Tinnevelly :: & Madras

August, 1927

Printed by

C. Munisawmy Mudaliar & Sons, Madras.

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் வரலாறு

பாண்டி வளநாட்டில், பொதியின் சாரலில், பாவநாசத்தைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்தில், உயர் சைவவேளாளர் மரபில் ஆனந்தக் கூத்தர் என்பார்க்கும் மயிலம்மையார் என்பார்க்கும் பிறந்தவர். இவருக்கு முக்களாலிங்கர் என்பது பிள்ளைப்பெயர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கொப்ப அன்பும் அருளும் வாய்மையுந் தூய்மையுங் கூர்த்த அறிவும் சிறுபிள்ளையிலேயே அமையப்பெற்றவர். ஐந்தாவதாண்டில் இவர் தந்தையார் கல்வி பயிற்றுவித்துத் திண்ணைப்பள்ளிக்கு அனுப்பி வந்தனர்.

அங்ஙனம் சென்று வருங்கால் ஒருநாள் வழியில் திருவாவடுதுறைத் திருமடத்தினின்றும் போந்த சில முனிவர்களைக் கண்டு நிலத்தில் வீழ்ந்திறைஞ்சி, முகமன் வழங்கித் தமது இல்லமழைத்துத் தமது அன்னையாரைக் கொண்டு திருவமுது ஆக்குவித்து அருத்துவிப்பாராயினர். அதனை யன்போடு செய்த அன்னையாரை நோக்கி,

> 'அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
> திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
> யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
> மானந் தவாத மயில்'

என்னுஞ் செய்யுளை அன்பு ததும்பப் பாடினர்.

பின்பு தமது தந்தையாரிடம் விடைபெற்று அம்முனிவர்களோடு பல சிவப்பதிகளையுங் கண்டு வணங்கித் திருவாவடுதுறையை யடைந்து திருமடப் பேராசிரியராய் விளங்கிய நமச்சிவாய மூர்த்திகளை இறைஞ்சி அன்னார் அருளுக்குற்று, ஒடுக்கத்தின்கண் எழுந்தருளியிருந்த பிள்ளைவேலப்பதேசிகரைக் கண்கள் களிகூரக் கண்டு, அவர்பால் சிவதீக்கையும், சைவசந்நியாசமும், சிவஞான யோகிகள் என்னும் தீக்கைப் பெயரும் பெற்றுச் சைவசித்தாந்த நுண்ணூல்களைக் கற்று வடநூற்கடலும் தென்னூற் கடலும் எல்லை கண்டுணர்ந்தனர்.

ஒருநாள் திருப்பாதிரிப்புலியூரின்கண் 'கரையேறவிட்ட முதல்வா வுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ' என்று ஈற்றடி வருமாறு ஒரு பாட்டுப்பாடக் குறித்தபடி பாடிப் பொன் முடிப்பு

ஒன்று பெற்று அதனைப்பெற விரும்பி வருந்திய பார்ப்பன னொருவனுக்குக் கொடுத்துதவினர்.

இவர் அருளிச் செய்த நூல்களாவன:—

இலக்கணம்

க. தொல்காப்பியச் சூத்திர விருத்தி, உ. இலக்கண விளக்கச் சூருவளி, ௩. சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தியுரைத் திருத்தம்.

இலக்கியம்

க காஞ்சிப் புராணம் (முதற்காண்டம்) உ. சோமேசர் முதுமொழி வெண்பா ௩. திருவேகம்பரந்தாதி ௪. திருமுல்லை வாயிலந்தாதி ௫. கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி ௬. இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி எ. குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி அ. கச்சியானந்த ருத்ரேசர் பதிகம் ௯. திருவேகம்பா ஆனந்தக் களிப்பு ௰. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் கக. அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் கஉ. செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம் க௩. திருத்தொண்டர் திருநாமக்கோவை க௪. நமச்சிவாய மூர்த்தி கண்மாலை முதலியன.

தருக்க முதலியன

க. தருக்க சங்கிரகம் அன்னம் பட்டீயம், உ. சிவஞான போத மகாபாடியம், ௩. சிவஞான போதச் சிற்றுரை, ௪. சிவஞான சித்தியார் சுபக்கம் உரை ௫. சித்தாந்தப் பிரகாசிகை ௬. எடுத்த என்னுஞ் சொல்லுக்கிட்ட வயிரக்குப்பாயம். எ. சிவசமவாதவுரை மறுப்பு அ. சுலோக பஞ்சக மொழி பெயர்ப்பு. ௯. சிவதத்துவ விவேகம் ௰. திருவாவடுதுறை மரபட்டவணை மறுப்பின் மறுப்பு கக. கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி.

இவ்வாறு பல நூல்களையுஞ் செய்து 'வான் செய்தவுதவிக்கு வையக மென் செயும்' என்றவாறு மாறில்லாத பேருதவியை இவ்வுலகிற்களித்த ஆதீன குலதெய்வமென ஆன்றோர் போற்றும் ஆசிரியர் விசுவாவசு ஆண்டு, சித்திரைத் திங்கள் ஆயிலிய நன்னாளில் சிவபிரான்றிருவடிநீழலடைந்தனர். இவர் காலம் ஏறக்குறைய நூற்றைம்பதாண்டுகள் எனத்தெரிகின்றது. இவர் மாணுக்கர்களிற் றலைசிறந்து விளங்கியவர் தணிகைப் புராண ஆசிரியராய கச்சியப்ப முனிவரும், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவருமாவர்.

உ

திருச்சிற்றம்பலம்

திருக்கலைசைச்

செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ்

விநாயகக் கடவுள்

மணிபூத்த மருமத்து நெடுமான் முதற்புலவர்
வான்பதம் வேட்ட வர்க்கு
வழங்குவோ னுந்தனது பதமிரந் தோர்க்குதவு
வள்ளலுந் தானே யெனுந்
தணிபூத்த தன்றந்தை போற்பிற குறித்ததூஉந்
தற்குறித் தேன்ற தொழிலுந்
தானே கடைக்கூட்ட வல்லசெங் கழுநீர்த்
தடங்களிறை யஞ்ச விப்பா
மணிபூத்த தொய்யிற் கரும்புசிலை யாகவிழி
யம்பினைப் பூட்டி மடவா
ரம்புயக் கிழவனைச் சீதானை வென்றவர்க
ளறிவினைத் திறை கோடலும்
பணிபூத்த மலர்மகளி ராங்கதனை மீட்டிடும்
படிவந் திருந்து செவ்வி
பார்க்குந் திருக்கலைசை மன்னிவாழ் தன்னையே
பாடுமென் கவி தழையவே. க

ஆசிரியர் கருத்து

அகளவடி வானபர மானந்த னேனுமெய்
யடியவர்க டம்மை யாள
வருளுரு வெடுத்தலா லதனிளமை நோக்கிமுன்
னங்கலார் கூறு மொழியாத்
தகவுபெறு சிறுதேரை யீற்றிற் றழீஇநலந்
தாங்குகாப் பாதி பத்துந்
தண்டாத வாஞ்சையிற் கலைசையுற் பலயானை
தன்னையா னின்றேத் தினே
னிகலுமொரு வேடம் பரித்துவரு மொருவனுமை
யெல்லோரு மொல்லைக் குழீஇ
யியல்பாக வவ்வுருவ முடையவரி னும்பெருமை
யெண்ணிப் பெருஞ்செல் வமு
மிகவுதவு நீர்மையை மதித்தியல்ப தாத்துதி
விளம்புமத் தாதிய ரினும்
வினையினேன் றன்னிடத் தோவாத பேரருள்
விளைத்திடு மெனக் குறித்தே. ௨

க. காப்புப்பருவம்

திருமால்

கார்கொண்ட கருநிறக் காளத்தை வெண்டிரைக்
கைகளி னெடுத்து நீட்டுங்
கடும்பிழையை நோக்காது திருவினொடு சுவையமுது
கதிர்மணி தனக் குதவிடும்

பேர்கொண்ட நன்றியே பாராட்டி வெண்கேழ்ப்
பெருங்கடற் பள்ளி கொண்டு
பிறங்குநீர்ப் புவிமிசைப் புருடோத் தமப்பெரும்
பெயர்கிறுவு மண்ணல் காக்க
வேர்கொண்ட தன்னைத் தளைப்பவரு மூருநரு
மிலரென்ப துலகு தேறக்
கெடுத்தவெம் பாசமோ டங்குசந் தன்கரத்
தேந்திமத தாரை சிதறிப்
பார்கொண்ட வெண்டிசைத் தறுகட் களிற்றுடல்
பனிப்பச் செவிக்கா லெழீஇப்
பகிரண்ட முற்றும் புகுந்துலாய்க் கலைசையிற்
பதியுமோர் களிறு தனையே. ௬

சிதம்பரேசர்

வேறு

மறம விந்துல கேழினு முயிர்க ளஞ்சவு லாவுபு
வதைசெ யும்புர நீறுசெய் புன்சிரிப் பாற்கடி
மலர்து வன்றிய வார்குழ லுமையி ளம்பிடி பூதர
மகளு ளஞ்சுக வாழ்வில மிழ்ந்திடத் தேக்கியு
மதுக ரங்குண மாய்வளை சிலைகொ ணர்ந்தம ராடிய
மதனை வென்றருள் சீர்நய னந்தனிற் பாற்குரு
மதியொ டுங்கதிர் வானவ னொளியி றந்தமை யாலயர்
மகித லங்களி கூர்தர வின்பினைக் கூட்டியும்
வெறிக மழ்ந்தறு காலுண மதுவு மிழ்ந்தலர் தாமரை
மிசைவ திந்தவ னோர்முடி விண்டகைப் பூத்தனில்
விரிக ருங்கட லூடெழு கொடிய வெங்கடு வானனி
வெருவு மும்பர்மு னேயப யந்தனைக் காட்டியும்

விறல்பி றங்குக டாமிசை யெதிரு மந்தக ஞர்தமை
மெலிவு கொண்டுயிர் வீடவு தைந்தபொற் ருட்டுணை
வினையி னென்றலை மேலருள் செயவி ரங்கியு மேர்மரு
வியசி தம்பர ருபனை யன்புறப் போற்றுது
மறலொ ழுங்குத ளுதிட முழுவ துஞ்செறி நீள்கரை
பகல்வி சும்பென நீடுத ரங்கமிக் கார்த்தெறி
பவிர்செ ழுங்கதிர் மாமணி பரவி யெங்கணு மேவுவ
ததனி லொன்றிய மீனவி னந்தனக் கேற்றிட
வயல்வ ழிந்திடு மாறுத னகதி ரம்பிய வாலொளி
யணவு தண்புனல் வாவிகு ளிர்ந்திருட் கூட்டம
தழிய மென்கதிர் விசிய வெளிய வப்புலி போலுற
வருகு வந்தத ணீரைமு கந்தெடுத் தாற்றல்செய்
துறையு மங்கைய ராடவ ரதுவ ழுங்கிடு மாரமு
துணும ரம்பையர் வானவர் தங்களிற் ருேற்றவின்
னுலகெ னும்புகழ் மீறிய கலைசை யம்பதி யேதன
துறையு ளென்றுகி லாவிவ ணங்கிற் போர்க்கரு
ளுதவு மெய்பெரு மானையெவ் வுயிர்க ளுங்கொடு மாமல
மொருவி யன்புரு வாகிய டங்கவைத் தாட்கொளு
முகள பங்கய பாதனை யுலக மெங்கணு மாயெனை
யுடைய செங்கழு நீர்மத தந்தியைக் காக்கவே. ௨

சிவகாமியம்மை

வேறு

கரும்பு குழையச் சுரும்பொலிப்பக்
கடிப்போ துகுத்த மதனையெம்மான்
கண்டு மிசையா மெனக்கருதிக்
கனலிக் கூட்டு மாற்றலும்பின்

விரும்பு முயிர்கட் கிருங்காம
விளைவும் பிரச மலர்க்கணையும்
வில்லுந் தரித்த திருக்கரத்தால்
விளைத்த சிவகா மியைப்பணிவா
மரும்பும் வெகுளிக் கயஞ்சாடி
யவனி நடுங்க வுடன்மடங்க
லாண்மை யடக்கி யெதிரேறு
மடல்வெம் புலிப்போத் துயிர்செகுத்து
வரும்போர்ச் சரபத் துளங்குழைய
மார்பும் புயமுந் துவைத்தாடி
மகிழ்கூர் கலைசைச் செங்கழுநீர்
மழமா களிற்றைப் புரக்கவே. ரு

சுப்பிரமணியக்கடவுள்

வேறு

உரவோர்க ளுருவினின் மிகச்சிறிய ரேனுமவ்
வுரனிலாப் பெரியர் தம்மை
யுடைந்தழிய வென்றுவிறல் வாகைசூ டுவரெனு
முரைக்கிலக் கியமா கவே
விரவாது விண்ணம் பொதிந்துய ரடுக்கலின்
வீறழித் தாண்மை கொண்ட
வெற்றிச் சிறப்படைச் செய்யவேல் கைவைத்த
வீரனுக் கன்பு செய்வாம்
புரவாக வைம்பொறியும் வைத்திட் டவற்றுளோர்
பொறியுடைய வேக தேசம்
பூண்டமற் றவயவங் கட்குமே லாந்தலைமை
பொலிதலாற் பத்தி செய்வோர்க்

கிரவோட்டு தன்குறிப் பெயரையே முழுதிற்கு
மேற்பித்த திருமு கத்தி
னெழில்வாய்ந்த தென்கலைசை மேவுசெங் கழுநீ
ரிருங்களிற் றைக்காக் கவே. ௬

வைரவக்கடவுள், பிரமதேவர், தேவேந்திரன், இலக்குமி, கலைமகள், துர்க்கை, சத்தமாதர், முப்பத்து முக்கோடிதேவர்

வேறு

அலைத்தலை குலைக்கண மிடித்தெழு செழும்புன
லாலும் பெருக்கமு
மனக்குழு வளக்கயல் பிடித்துண நினைந்துற
வாடுஞ் செறுக்களு
மலர்ச்சிசெய் மலர்த்தலை மிதித்துளர் சுரும்பிசை
யாயுந் தருக்களு
மடற்கரி பரித்திர டருக்கியு ராறுங்கலி
யாருந் தெருக்களு
நிலக்குல மகட்கணி முடிக்கிணை பொருந்திய
தேரின் பிறக்கமு
நெருக்கிய மறப்பகை முருக்கிய பெரும்புகழ்
மேவந்த நொச்சியு
நிரப்பினர் பசிப்பிணி யறக்கெட வழங்கற
நீடுந் தொடர்ச்சியு
நிலைத்தகலை சைப்பதி நகர்க்குளொரு செங்கழு
நீரைங் கரத்தனை

மலர்ப்பத மெடுத்தவ ரியைப்பட வகிர்ந்துரி
மூடும் புயத்தனும்
வரிச்சிறை யளிக்குலமு ழக்கவிதழ் விண்டுகள்
வாரம் புயத்தனு
மதத்துவிழ லேத்தனி சுழித்தெதிர் கொடும்பகை
மாய்வெண் கயத்தனு
மணிக்குவை திரைக்குமலை யிற்றுயின் முகுந்தன
வாவுங் குயத்தியு
முலப்பறு கலைத்திற மனைத்துமுத வுஞ்சுதை
யூர்பங் கயத்தியு
முருத்திடி யெனக்குர லுரப்புமகி டன்றிற
லோவுஞ் சயத்தியு
முருக்கிளர் முருக்கித ழுருக்குமத ரம்பெறு
மேழ்பெண் குலத்தரு
முருத்திரர் மருத்துவர் வசுக்கதி ரெனும்புல
வோரும் புரக்கவே. எ

உ. செங்கீரைப் பருவம்

அண்டர்பணி மூவாத கூயைபா லெய்திமழ
வானது நிகர்ப்ப வெய்யோற்
கல்லாது தனதுநல மீயாத தாமரை
யணங்கிடை விரும்பி யேகித்
தண்டவள வெண்முழு மதிக்கடவுள் குழவியாய்த்
தடைபட்டு நின்ற தேய்க்குந்

தனிமுகச் சிறுகோட்டி னணிகிம் புரிக்கவின்
றன்னைக் குறித்து நோக்கு
மண்டிய விருப்பின தொருப்பாடு தண்டாது
வளர்தலால் விழிகள் சாய்த்து
மாறிமா றித்தெரித் திடுகின்ற தேய்ப்பவொளிர்
மதிமுக மசைந்தா டுறத்
திண்டிறல் படைத்தசெங் கழுநீர் மதக்களிறு
செங்கீரை யாடி யருளே
திருந்துமடி யார்க்கருள் புரிந்தகலை சைப்பிரான்
செங்கீரை யாடி யருளே. அ

காதமலி பங்கயத் திருமுக மசைத்தொறுஉங்
கார்க்குஞ்சி மீது கவினக்
கால்யாத்த வெண்மலர்த் தொங்கல்பின் ஞன்றுலாய்க்
கன்னத் தளாவி வாசந்
தந்தமத நீரிற் படிந்துகரு நிறமாய்த்
தணந்துழிப் பற்று மந்நீர்
தனையுதறி முன்னைத் தனதுநிற மெய்தித்
தாங்கந் துரங்க நிரையிற்
கொந்தல ருகும்புன்னை மீமிசைத் தாவிக்
குதிக்குமணி யாழி யகடு
குழியக் குறைத்துக் கறுத்துமழை தூஉய்வெண்மை
கொண்டுவளர் கொண்ட லேய்ப்பச்
சிந்தூர முகத்தசெங் கழுநீ ரிளங்களிறு
செங்கீரை யாடி யருளே
திருந்துமடி யார்க்கருள் புரிந்தகலை சைப்பிரான்
செங்கீரை யாடி யருளே. கூ

வேறு

கொங்கலர் கின்னடி சென்னியில் வைத்துக்
கூப்பிய கையொடுநின்
குளிருள மகிழ்தரு தொழில்புரி தாதியர்
கொள்கையி னிரைநிரையாய்த்
தங்கிய பங்கய மங்கையர் முதலிய
தமனிய வுலகுறையுந்
தையலர் மருமத் தொய்யில் பரித்த
தனக்கரி யுலவைகளுள்
திங்களி னொளிர்தன துலவை நிகர்ப்பன
தேர்தர வெதிர்நோக்கித்
திரிவது போவிரு புறமு மலர்ந்தவிர்
திருமுக மினிதசைய
வங்குச மேந்திய செங்கழு நீர்க்களி
றுடுக செங்கீரை
யணிகிளர் கலைசைந கர்க்கு ளிருந்தவ
ளாடுக செங்கீரை. ௰

சுரும்பு முரன்றலர் கொன்றை செறித்த
துலங்கொளி வார்சடிலத்
தோன்றலை யெய்தி யணைத்திடு காலைத்
தோளொடு மருமமெலா
மிரும்பு ஞறும்படி யுழுதரு தகைமை
யிரண்டற் குஞ்சமமா
யியைவது நோக்கி மகிழ்ந்திவை தம்மு
ளிணங்கச் செய்வதென

விரும்பி யமைத்து மடப்பிடி கோட்டொடு
வில்லுமிழ் தன்னுலவை
மேவிட வைத்துக் கொங்கைத் திம்பய
மென்மெல வுண்டுமனை
மரும்பிய செவ்வாய்ச் செங்கழு நீர்க்களி
ருடுக செங்கீரை
யணிகிளர் கலைசைந கர்க்கு ளிருந்தவ
னுடுக செங்கீரை. கக

வேறு

பொங்கொளி வீசு பொலங்குழை காது
புகுந்தோர் கொண்டாடப்
பொன்றிகழ் தோளணி தொங்கலி னேடு
புலம்பா நின்றாடத்
துங்க நிலாவு தடங்கையி னீர்சுல
வுங்கார் வென்றாடத்
துன்றிய தேமலி குஞ்சியி னேடு
தொகுந்தார் விண்டாடப்
பங்கய னுதியர் வந்து தவாத
பதந்தா வென்றாடப்
பண்பறு நேரலர் நெஞ்சழல் வாயுறு
பஞ்சாய் நைந்தாடச்
செங்கழு நீர்மத தந்தியி நாயக
செங்கோ செங்கீரை
தென்கலை சாபுரி தங்கிய நாயக
செங்கோ செங்கீரை. கஉ

௵

௩. தாலப்பருவம்

புதிய வாசந் தனைப்பரப்பிப்
புறத்தே யெங்குந் திரிந்தயரும்
பொறிவண் டினங்க டமையழைத்தம்
புயத்தே னூட்டிப் பகலோம்பி
மூதிய நிசிவந் திடும்போது
முகைவிண் டலர்ந்த நறுங்குமுத
மூரிச் செழுந்தேன் முகந்தூட்டி
முழுதுங் காத்துக் கடல்வரைப்பின்
வதியு மிரவோர் தமைக்கீர்த்தி
மகளாந் தூதின் வரக்கூவி
மகிழ்ந்தெப் போது மெவ்வாறும்
வழங்கிக் காக்கும் பெருங்கொடையோர்
கதிய நடஞ்சூழ் திருக்கலைசைக்
களிறே தாலோ தாலேலோ
கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்
கன்றே தாலோ தாலேலோ. ௧௩

தொடுக்குந் தெரியற் கருங்கூந்தற்
றோகை யனையார் துடுமெனநீர்த்
துறையுட் பாய்ந்து விளையாடத்
துண்ணென் றெழுந்து மேற்சென்று
தடுக்கும் பசுங்கோட் டலர்கனிகாய்
சாடித் தனது வயிறுருவத்
தாக்கு நெடுவா ளையுமதனைத்
தன்னுட் பிணிக்குந் தேனடையு

மடுக்கும் பரிதி நுழைந்துதின
மலக்கும் பகைமை மீக்கொண்டங்
கடர்த்துப் பறித்த வவன்றிருத்தே
ரச்சு மதுகோத் திடுமுருளுங்
கடுக்கும் பொழில்சூழ் திருக்கலைசைக்
களிறே தாலோ தாலேலோ
கருணை முதிர்ந்த செங்கழுநீர்க்
கன்றே தாலோ தாலேலோ. கச

வேறு

வேய்மரு டோளியர் குஞ்சி திருத்தி
மிலைச்சிய செம்மணியின்
விற்பயில் கொன்டைவெய் யோனென வாங்கி
யுடைத்திரு கூறுசெய்தே
தேய்மதி கொண்டபி ரான்சடை மேலெழில்
செய்கென வோர்பிளவைச்
சேர்த்துப் பின்னொரு பிளவுமை யாண்முடி
செருகிச் சமமாகத்
தூய்மதி யென்றிறை மார்பணி கொம்பைத்
தொடையி லறுத்துடனத்
தோகை முடிக்க ணிசைத்து மகிழ்ச்சி
துளும்பித் தந்தையொடுந்
தாய்மகிழ் கூர நடித்தருள் செல்வா
தாலோ தாலேலோ
தகைபெறு செங்கழு நீர்மத வேழந்
தாலோ தாலேலோ. கரு

வெண்டலை யேந்திய வேணி முடிப்பரன்
மெய்யினும் வெம்பனிசூழ்
வெற்பன் மடக்கொடி மெய்யினு மேறி
மிதித்தா டுந்தோறும்
வண்டலை யக்கடி வீசு கவுட்புறம்
வாக்கும தப்புனலும்
வார்தரு தடவுக் கைத்துளை யுமிழு
மதப்புன லுஞ்சிரமேற்
கொண்டலை நிகரக் கொட்டுவ திருமுது
குரவர் தமக்குமணங்
குலவிய யமுனையு மந்தா கினியுங்
கொடுவந் தாட்டல்பொருந்
தண்டலை சூழ்கலை சைச்சிறு களபந்
தாலோ தாலேலோ
தகைபெறு செங்கழு நீர்மத வேழந்
தாலோ தாலேலோ. ௧௬

வேறு

மலைம டந்தையருள் பாலா தாலோ தாலேலோ
மதமி குந்திழிக போலா தாலோ தாலேலோ
வலகி லன்பர்பணி காலா தாலோ தாலேலோ
வருள்சு ரந்திடும்வி சாலா தாலோ தாலேலோ
விலகு கின்றபணி மார்பா தாலோ தாலேலோ
வினிய மந்திரசொ ரூபா தாலோ தாலேலோ
பொலிபெ ருங்கருணை யாளா தாலோ தாலேலோ
புகழ்பெ றுங்கலைசை வாழ தாலோ தாலேலோ.

௪. சப்பாணிப் பருவம்

பக்குவ முதிர்ந்துசிவ புண்ணிய நிரம்பிமல
பாகம் பிறந்து சத்தி
பதிந்துவினை யொப்புப் பழுத்தவர்கள் பந்தநோய்
பாற்றுமொரு செங்கை மலரு
மக்கருணை யடியவர்க ளுயிருடன் பொருள்காய
மாமெவ் வகைப்பந் தமு
மங்கி கரிக்குமோர் கைம்மலரு மாறுபா
டாதரித் திடுசெய் கையான்
மிக்குறும் பகைமைமேன் மேலெய்தி யாங்கது
விலக்கத் தமக்கு யர்ந்தோர்
மேதினிக் கின்மையாற் போராட் டியற்கையின்
மெலியாம லொன்றை யொன்று
தக்கவகை தாக்குதல் கடுப்பக் கவின்செயவொர்
சப்பாணி கொட்டி யருளே
தங்குகலை சைப்பதிச் செங்குவளை நாயகன்
சப்பாணி கொட்டி யருளே. ௧அ

வயங்குமுழு மதியத் திருஞ்சுவைப் புத்தமுது
வாய்மடுத் துண்ண வெண்ணி
வருகின்ற தருவர்குல மொப்பக் கலித்தலை
மடிக்குந் திரைப்பு னற்பூங்
கயங்கிளர் செழுங்கமல வாண்முகத் தூற்றெழூஉங்
கலுழிக் கடாம டுப்பக்
கருதிவரு மெல்லிசைத் தும்பியும் வண்டுங்
காங்குமிஞி றுஞ்சு ரும்பும்

பயங்கதுவ மொய்த்தவை விரைந்தோட வோச்சுறாஉம்
பண்புபொர வேற்போர்க்கு வான்
பரிசிலை யளித்தளித் துச்சிவந் தாங்கொளி
பரப்பிமணி யாழி பூண்டு
தயங்குமிரு கைகளா லெழில்பூப்ப மதகளிறு
சப்பாணி கொட்டி யருளே
தங்குகலை சைப்பதிச் செங்குவளை நாயகன்
சப்பாணி கொட்டி யருளே. ௧௬

வேறு

மும்மல மாமத முற்றுப் போத
முழுத்தறி யறவீசி
முகிழ்த்தல ரன்பின் சங்கிலி யுதறி
முதிர்ந்த வருட்கூடத்
திம்மென நீங்கி வெளிக்கொடு புவன
மெனுங்கடு வனமோடி
யெப்பா கர்க்கு மடங்கல வாகி
யியங்கு முயிர்க்கரிக
டம்மைவி டாது தொடர்ந்து பிணிப்பத்
தகுமங் குசபாசந்
தாங்குதல் கண்டுந் தம்போ லெண்ணிச்
சார்பவை தமைநகையாக்
கொம்மைம லர்க்கைகள் கொட்டுவ தேய்ப்பக்
கொட்டுக சப்பாணி
குலைகெழு தடநிறை கலைசை நகர்க்கிறை
கொட்டுக சப்பாணி. ௨0

மட்டுமிழ் கொன்றை மிலைச்சுபொ லன்சடை
வள்ள லுநள்ளிருள்கூர்
வண்டுளர் குழலுமை யாளுங் கைதொடும்
வள்ளத் தருசுவையுந்
தொட்டு வளாவி யளைந்தவர் மிசைமுடி
தொட்டடி மட்டுமுறத்
தூவி விடுத்தணி வீதி புகுந்து
தொடர்ந்து சிறுர்குழுமி
விட்டு நிறைத்திடு புழுதிக் குவைகளை
யெற்றி யுழக்கியபின்
மியைந்திடு மப்புழு தித்துகள் போம்படி
யெண்ணிக் கைகளினைக்
கொட்டுவ தெனவெழில் கொட்டிட வோர்முறை
கொட்டுக சப்பாணி
குலைசெழு தடநிறை கலைசை நகர்க்கிறை
கொட்டுக சப்பாணி. உக

வேறு

விரிதிரை பொங்கி புலாவு மளக்கர் மணிப்பாயன்
மிசைவிட முந்தும ராவணை யிற்றுயில் புத்தேளு
மருமல ரம்புய மேவுமி ருக்கை மறைக்கோவு
மதமழை சிந்துவெ ளானை பெருத்தனு மற்றேரு
மருடரு கென்றுப ராவி நினைத்தது செப்பாமுன்
னவரவர் சிந்தையி னுர்வன முற்றும ளித்தோகை
கருதிடு செங்கழு நீரிறை கொட்டுக சப்பாணி
கலைசை புரந்தருள் காரண கொட்டுக சப்பாணி. உஉ

ரு. முத்தப் பருவம்

அதிருந் தரங்க முரசறைய
வளிபண் பாடத் துள்ளுவரா
லனைத்தும் வெடிபோய்த் தாவிமறிந்
தாடிக் குதிக்கச் சங்கினங்கள்
பிதிருந் தரளம் பரிசிலெனப்
பேணிச் சொரியும் புனற்றடஞ்சூழ்
பெருநீர்க் கலைசைச் செங்கழுநீர்ப்
பிள்ளா யல்குன் மணிப்பாம்புங்
கதிரும் பசும்பொற் றனக்கோடுங்
காயத் துடையே நீயணியுங்
கலனும் பணிக்குங் கோட்டினுக்குங்
கடுத்து வெருவே மனுகவந்து
முதிருஞ் சிவப்பூர் செழுங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முழுது முணர்ந்த பரபோக
முதல்வா முத்தந் தருகவே. உ௩

கொத்து நிரைத்த மலர்ச்சோலைக்
குயில்கூஉங் கலைசைச் செங்கழுநீர்க்
குழகா வம்மை யுனையீன்ற
கோமான் றனக்குப் பணிநிலைக்க
வைத்து நிரைத்த பலவண்ட
வகுப்பும் வெள்ளிற் கனியெனநீ
மதித்துக் கவளங் கொளக்கரத்தால்
வளையே லெந்தாய் தளவமல

ரொத்து நிரைத்த நகையாடி
யுன்னோ டுரிமை பாராட்டு
மோகை மடவா ரெனயாமு
மூலவா வின்பக் கடன்மூழ்க
முத்து நிரைத்த கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முழுது முணர்ந்த பரபோக
முதல்வா முத்தந் தருகவே. உச

வேறு

துளிதூங்கு தேந்தொடை மிலைச்சிய கருங்கூந்தல்
சுவன்மிசைப் புரள நின்று
தொடித்தோள் பெயர்த்தர மடந்தையர்க ளிருபுறந்
தூமணிக் கவரி வீசத்
தெளிதூங்கு நவமணி குயிற்றியணி வாலுளைச்
சிங்கஞ் சுமந்த தவிசிற்
செங்கோ னடாத்துமிறை வைப்புமுத லெங்கணுஞ்
செல்லப் பரந்து விரியு
மளிதூங்கு மெமதுளப் பங்கயங் குவியவது
வல்காமை நிற்கு மளவு
மவிரொளி பெருதவெம் முகமதியு மாலிப்ப
வமிழ்தம் பொழிந்தா லெனக்
களிதூங்கு நகைநிலவு சிறிதே யரும்புநின்
கனிவாயின் முத்த மருளே
கலைசைநகர் வந்தசெங் கழுநீர் மதக்களிறு
கனிவாயின் முத்த மருளே. உரு

திரைபூத் தொடுங்குவ தெனப்படி யளிக்குலஞ்
சிறைபுடை பெயர்த்தொ டுக்கித்
தீஞ்சுவை மடுத்துண்டு களிதரப் பூங்கவு
டிறந்தூற் றிருந்து வட்டும்
விரைபூத்த கடமுங் கொலைத்தொழில் பழுத்தொழுகும்
வெய்யகூர்ங் கோடு மெங்கண்
மென்மலர் முகத்திற் பெருங்கறையு மூறும்
விளைத்திடின் விளைக்க வெங்கண்
மரைபூத்த கண்ணிமைக் குள்ளெழுது மையும்
வயங்குழைக் கணியு மையன்
வதனத் திருங்கறையு மூறுஞ்செ யாவன்பு
வாய்ப்பப் பவக் கடற்கோர்
கரைபூத்த செம்மொழிப் பழமறை முளைத்தநின்
கனிவாயின் முத்த மருளே
கலைசைநகர் வந்தசெங் கழுநீர் மதக்களிறு
கனிவாயின் முத்த மருளே. உசு

வேறு

மறைநெறி யொழுகுநர் தங்களை யாள
மதித்த மறைப்பொருளே
வளிவெளி சலநில மங்கியெ லாமுரு
வந்து நிறுத்தவனே
நிறைவளை மகளிர் நலம்படர் வோர்த
நினைப்பி லொளித்தவனே
நிருமல வறிவினர் சிந்தை நிலாவிய
நிர்க்குண வற்புதனே

யறைகட லுலகொடு பங்கயன் மாலை
பளித்து வளர்த்தவனே
யவரவர் பெறவுறு பந்தமும் வீடு
மமைத்த வறக்கடலே
முறைவளர் கலைசைகொள் செங்கழு நீரிறை
முத்த மளித்தருளே
முனிவர்க ளமரர்கள் வந்தடி தாழ்பவ
முத்த மளித்தருளே. உ௭

கா. வருகைப்பருவம்

சுத்தவொளி யாகியறி வாகிமல மாயைத்
தொடக்கிற் படாத நிறைவாய்த்
தொல்லுலக மெங்கணுங் கரைபுரண் டலையெறி
சுகாதீத வாரியி லெமை
வைத்தருள வெம்போ லெடுத்தநின் றிருமேனி
மழமையைக் கண் டினமென
மதித்தளவ ளாவிவிளை யாடக் குறித்தோடி
வருமிள மகார்கள் குழுமி
மொய்த்தவழி நீதவழ்ந் தெதிர்வரவு காண்டலு
முழுக்களிறி தென்ன வெருவி
மொய்யொளிக் கண்களைக் கையாற் புதைத்தலறி
முன்விரைந் தோட முளரிக்

கைத்தலத் தங்குசம் பாசந் தரித்தசெங்
கழுநீர்ப் பிரான் வருகவே
கண்கதுவு மெழில்கொண்டு விண்கதுவு மாளிகைக்
கலைசை நாயகன் வருகவே. உஅ

அலங்கொளி ததும்பிக் கொழுந்துவிடு நித்தில
மலைத்துக் கொழிக்கு மலையா
லாற்றல்புரி தன்கரை கரைத்துத் தமக்குறுதி
யாக்குநர்த மூக்க மாய்க்கும்
விலங்கனைய புல்லியர் பொருஉம்புனற் பூந்தடம்
விலங்கா மலங்கு மீன்போல்
விழையுநின் முன்புறங் காண்டோறு மூற்றிய
விலாழிக் கடாங்கொள் களபக்
குலங்களெதிர் கொண்டோகை கூர்ந்திடப் பின்புறக்
கோமளங் காணுந் தொறுங்
குழமைச் சிறுருங் குழீஇத்தொடர்ந் துன்போற்
குலாவிவர வெம்மு ளத்துக்
கலங்குமரு ளீர்ந்திட் டிலங்குமருள் காட்டுசெங்
கழுநீர்ப் பிரான் வருகவே
கண்கதுவு மெழில்கொண்டு விண்கதுவு மாளிகைக்
கலைசை நாயகன் வருகவே. உகூ

மண்டலத் துண்டுடுத் திளநகை மடந்தையர்
வடந்தழுவு கொங்கை தோயு
மருளன்றி யருளிலாப் பூரியரு மாரியரும்
வாக்குமன மெட்டாத நீ

கொண்டநற் றிருமேனி யுண்மையைத் தத்தங்
குறிப்பினுக் கேற்ப மொழியுங்
கொள்கைபோற் சேயிடையி னின்வரவு கண்டுசிலர்
கூடும் பொதுக் காட்சியால்
வெண்டரள நீள்கோட் டுவாவென் றுளங்கொள்ள
வேறுசில ருற்று நோக்கி
வேழமன் றீங்கிது தவழ்ந்துவிளை யாடுநம்
விநாயகன் கோல மென்னக்
கண்டனர் மொழிந்துளத் தள்ளுற வெங்கள்செங்
கழுநீர்ப் பிரான் வருகவே
கண்கதுவு மெழில்கொண்டு விண்கதுவு மாளிகைக்
கலைசை நாயகன் வருகவே. ௩௰

வேறு

இருகை யூன்றித் தவழ்ந்துமழ
வேற்றின் வருந்தோ றுங்காங்கே
யெறுழ்வன் புழைக்கை நெட்டுயிர்ப்பா
னிருமா நிலத்தைக் குழிப்பதுவும்
பெருகுங் கடைக்காற் செயுஞ்செவிவான்
பிளப்ப தேய்ப்பப் பல்காலும்
பெயர்ந்து மடங்கி யசைந்தாடும்
பீடுந் தத்தம் பொறிதமக்கு
மருவும் புலனை யவற்றிடமா
மண்ணை யகழ்ந்தும் வெளிப்பரப்பை
வளைத்துங் கவவிக் கொடுத்துதவும்
வண்மை காட்ட வசைந்தசைந்து

முருகு விரியுந் தொடைப்புயத்து
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே. ௯௧

உருகு மடியா ரள்ளூற
வுள்ளே யூறுந் தேன்வருக
வுண்ணத் தெவிட்டாச் சிவாநந்த
வொளியே வருக புலன்வழிபோய்த்
திருகு முளத்தார் நினைவினுக்குஞ்
சேயாய் வருக வெமையாண்ட
செல்வா வருக வுமையீன்ற
சிறுவா வருக வினைவிழியாற்
பருகு மமுதே வருகவுயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே வருகநறும்
பாகே வருக வரைகிழித்த
முருக வேட்கு முன்னுதித்த
முதல்வா வருக வருகவே
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே வருக வருகவே. ௯௨

எ. அம்புலிப்பருவம்

தண்டாள மேந்தித் தயங்குநீள் கோட்டைத்
தழீஇச்சித் திரம்பெற்ற வான்
றனியுவாத் தரவந்து மல்குநா கத்தார்க
டண்டாத சூழ்ந்து மகிழ்வு
கொண்டிட விலங்குதொட் டிக்கலையி னளியமிழ்து
கொட்டியெமை யாளு முக்கண்
குழகன் படைத்தபெரு வையஞ் சுமந்தாற்று
கொள்கையி லுருக்கொண் டெதிர்
கண்டவர் வியப்புறும் படியருண மணியுருக்
கவினுரு மொளிவீ சிடுங்
காட்சியா வின்னையிவ னைத்துளா னீயுமிக்
கடவுளை நிகர்த்து ளாய்கா
ணண்டரும் பழமறையு மோலமிட நின்றவனொ
டம்புலீ யாட வாவே
யருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறொ
டம்புலீ யாட வாவே. ௬௬

ஒளிவந்த நீயுடற் கூறுபடு வெம்பாந்த
ளொன்றனுக் கஞ்சி யஞ்சி
யுழிதந்து திரிவையிவ னண்டபகி ரண்டமு
மொருங்கஞ்ச வெய் துயிர்க்குந்
துளிவந்த காரிபடு துளைவெள் ளெயிற்றுவாய்த்
துத்திப் படக்கோ ளராத்
தொகையெலா மெய்யினுங் கையினுங் கலனெனச்
சூழ்ந்துகொண் டான்வெண்மை கூர்ந்

இளிவந்து தேயுங் களங்கவுரு வுடையைநீ
யிவன்செம்மை வாய்ந்து தேயா
தென் றுமக ளங்கவுரு வுடையனு கவினிவனை
யெவ்வாறு மொப்பா யலை
யளிவந்து நின்னையு மழைத்தனன் காண்விரைந்
தம்புலீ யாட வாவே
யருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ யாட வாவே. ௯௭

கரும்பினை நெருக்கிநெரி செய்ததன் றேறலைக்
காற்றுநெட் டாலை யேய்க்குங்
கயமுகன் கையகப் பட்டுநல நீங்குசுரர்
களை கணுய்த் தோன்றி யவனைத்
துரும்புபட வென்றழித் தவ்வமர ரோடுநின்
றுயருந் தவிர்த் தளித்த
சூழ்கருணை நீயறிவை யன்றியும் யாருந்
தொடங்குதொழி லினிது முற்ற
விரும்புவியி னூறுதீர்த் தருள்பவனு மிவனலா
லில்லையிவ னிசையை யின்னு
மியம்பிடி னுலப்புறு தீங்குநீ வரினுன்பி
னெய்திடும் பாம்பு மணியு
மரும்பணிக ளொடும்வைத்து மீண்டுதொட ராதுசெயு
மம்புலீ யாட வாவே
யருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ யாட வாவே. ௯௮

தெருளாத தக்கனுர் வேள்வியை யழித்தும்பர்
சென்னியை யுருட்டியினையுந்
தேய்த்தசய வீரனு மிவன்றம்பி யென்பதுந்
திருமார்ப னவம திப்ப
வுருளாழி கைக்கொண்டு மற்றவ னிரந்தாங்
குளுற்றும்விக டக்கூத் தினுக்
குள்ளம் பெருங்கருணை பூத்தபின் ருங்கதனை
யுதவினு னிவனென் பதும்
வெருளாது சீறிய வரக்கனைப் பந்தாடி
விட்டதுங் கேட்டி லாய்போல்
வேண்டிநா மேவலி னழைத்திடவு மதியாது
விண்ணுறு சேறி கண்டா
யருளா திவன்கடியில் வேறுபுக லேதுனக்
கம்புலீ யாட வாவே
யருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ யாட வாவே. ௩௧

வையகம் போற்றுமெம் மானிவனை நீயவ
மதித்துவெஞ் சாப மெய்தி
வசையிடைப் பட்டனைமு னின்றுமவ மதிசெய்து
வாராம லொழியி னங்க
ணெப்திபொரு தண்டமும் புரியவேண் டாதிவ
னிருந்தாங் கிருந்து நீள்கை
யெடுத்துவிண் ணுறநிமிர்த் தொருதருவ னர்பிணித்
திடுஞ்சூத் திரத்தி னின்று
மொய்யென வுறத்தனைப் பற்றிப் படுப்பனிவ
னுடல்பூண்ட பாம்பி னத்து

ளொன்றறியி னண்ணுந்து தாவியுனே யுண்டுபின்
னுமிழாது விடினும் விடுமா
லேயமில யாகலான் மற்றிவன் வெகுளுமுன்
னம்புலீ யாட வாவே
யருட்குண நிரம்புசெங் கழுநீர் மதக்களிறு
டம்புலீ யாட வாவே. ௩௮

அ. சிற்றிற் பருவம்

கூன்பாய் வடிவச் சிலைநுதலுங்
குவவுத் தனமும் வாய்த்தமலைக்
குமாரி யுளமும் விழியுமகிழ்
கூரக் குறும்பு விளையாடி
வான்பாய் கருணை பூத்திங்கும்
வந்தா யெந்தாய் சிறுவீடு
வகுக்குந் தொடக்கத் துனைப்போற்ற
மறந்தேஞ் சிறியே மதனுனீ
தான்பாய் வெகுளி மீக்கொண்டுன்
றன்மை காட்ட லடாதுனக்கித்
தாழ்வு தீரச் சிறுசோறு
தருவே முன்னர் வாவிதொறுந்
தேன்பாய் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே. ௩௯

விருந்து விளிப்போ மெனக்கருதும்
வேலை யடிகே ளிவணியே
விரும்பி வந்தா யெனமகிழ்ச்சி
மீக்கூர் தலினுற் செவ்வாயின்
முருந்து தோன்ற முறுவலித்தே
மல்லா லொருநின் கரிமுகம்போன்
முகமும் பூதப் பெருவயிறு
முடங்குங் குறட்டா ளதுநடையு
மிருந்த வாறு நோக்கிநகைத்
திட்டே மல்லே மிடந்தோறு
மிருக்கு முழக்குந் தேவாரத்
திசையுந் துவன்றி யோங்கவளர்
திருந்துங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே. ௫௬

தவளம் பழுத்த கூனிளஞ்
சசிநே ருனது கோட்டினெடு
தடந்தாழ் புழைக்கைக் கெதிராகத்
தனத்தோ டுரோமா வலிதாங்கும்
பவளம் பழுத்த சேயிதழார்
பயிலு மனைக ளன்றியொன் றும்
பற்றாச் சிறியேஞ் சிறுவீடுன்
பதத்துக் கிலக்கோ பசுபோதக்
கவளந் தெவிட்டு மதகளிறே
கண்ணின் மணியே நான்மறையுங்

ஈதறித் திரிந்துங் கண்டறியாக்
கதியே துறைக டொறுந்தரளந்
திவளுங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே. ௨௰

நென்னற் பொழுது விருந்தாக
நின்னை விளிப்பேங் கடக்கலுழி
நீத்தஞ் சிற்றி லழிக்குமெனு
நினைவால் விடுத்தே நான்மறையு
முன்னற் கரிய பரம்பொருளே
யுண்மை யிதுவா மவமதியா
லுன்னை யழையா திருந்தேமென்
றுள்ளங் கருவிச் சிறியேமை
யின்னற் படுப்பக் குறும்புபல
வியற்று நின்றாய் நின்பெருமைக்
கேலா தடிகேள் பெருங்கருணைக்
கெல்லா யெளியேந் தவப்பேறே
தென்னற் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே. ௨௧

பெருத்த வயிறு தயங்கமெல்லப்
பெயர்ந்து நடந்து குடங்கைமிசைப்
பெரும்பண் ணியமு மேந்தியெம்பாற்
பேணி வருநின் வரவினைக்கண்

டருத்தி யொடுநீ யுண்டபரி
கலசே டத்தை யடியேங்கட்
களிக்க வருவா யென்றுவகை
யரும்பி வழிபார்த் திருந்தேமை
வருத்த லழகோ விக்கினஞ்செய்
மன்ன னெனும்பேர் பேதையரே
மாட்டுத் தெரிப்ப தொருபுகழோ
மடவா ருடன் மகிழ்நரென்றும்
திருத்துங் கலைசைச் செங்கழுநீர்ச்
சிறுவா சிற்றில் சிதையேலே
தெள்ளித் தெளிந்தோர்க் கள்ளூறுஞ்
செல்வா சிற்றில் சிதையேலே. ௪உ

௯. சிறுபறைப் பருவம்

குறுகுறு நடந்தெய்தி யெம்பிரான் றிருமேனி
குழையமே லேறி வேணிக்
கொத்தினைக் கோட்டினிற் கோத்தலைத் துதறிவான்
குளிர்புனல் புழைக்கை யெற்றிப்
பொறியரவு தலைமாலை வெள்ளென்பு கைம்மாப்
புலிச்சரும முதலணி யெலாம்
பொள்ளென வெடுத்தெடுத் தங்கையன லிற்பெய்து
போக்கியிள மதியை வன்றி

பெறுமுலவை யொன்றப் பொருத்தித் திருக்கைமா
னிடைவைத்து முற்று மதிசெய்
திருவிசும் புய்த்துவான் றருத்தரும் பேரணிகொ
டெங்கணு மலங்க ரித்துச்
சிறுமையில்லை யினியென வசைக்குங் கரங்கொண்டு
சிறுபறை முழக்கி யருளே
தென்கோ விருந்தநக ருற்பல விநாயகன்
சிறுபறை முழக்கி யருளே. ௪௩

இருக்கோல மிட்டின்னு மறியாத னின்று
ளிறைஞ்சாது தபுமாந் தருக்
கிறுதியிற் கட்கடை நெருப்புகச் சிறிவரு
மியமன் றருக்கோ தையு
முருக்கோல மேவச் சிரக்கவச மாகமை
யுண்டவிழி வாளி புருவ
மொருதனு வெனக்கொண்ட சேனைக ணிரைத்தம
ருழக்குமதன் வெற்றி முரசுங்
கருக்கோடி கோடியுற் றுழல்புறச் சமயக்
கருத்தினர் குரைக்கு மொலியுங்
காதுறு வண்ணமமிழ் தஞ்சொரிவ தேய்ப்பக்
கறங்கவடி யார்க ளுள்ளத்
திருக்கோயின் மேவிவிளை யாடுமிள மதகளிறு
சிறுபறை முழக்கி யருளே
தென்கோ விருந்தநக ருற்பல விநாயகன்
சிறுபறை முழக்கி யருளே. ௪௪

வேறு

சழக்குப் படுசில பேய்கண் மடிந்தவர்
சரிகுடர் வலைதாங்கித்
தடவுத் தோற்பல கைத்தொகை யாவுந்
தளைதரு தெப்பமெனப்
பழக்கித் திரையெறி குருதிச் செக்கர்ப்
பரவைப் பூம்புனலுள்
படர்ந்து நெடுந்தசை மூளை வழும்புகள்
பற்றி யிருந்தயர
வழக்கிக் கடல்படு படைக ளனைத்து
முடைந்து பிதிர்ந்தலற
வொன்னலர் சென்னி யுருட்டிக் கயமுக
னுரமிரு பிளவுசெய்து
முழக்குற் றிடுவிறன் மாமுர சாள
முழக்குக சிறுபறையே
முற்படு சல்லைசயி லுற்பல வேழ
முழக்குக சிறுபறையே. ௬௫

குடங்கை குவித்திமை யோர்தொழ நின்று
குனிக்குந் தாதையிடங்
குறுகி யுரத்தொளிர் பன்றிக் கோடுங்
குளிர்சடை யிளமதியு
முடங்கு பறித்துக் குணிலிற் கைக்கொண்
டுயர்துடி கொட்டியவ
னுரித்தணி யும்பற் கோடு பிடுங்கிமு
னந்நிய யத்தையெறீஇ

வடங்கிளர் கொங்கைத் தூர்க்கை மிதித்திவர்
மகிடத் தலைவைபற்றீஇ
மாலவ னின்னிய மோதி யெவர்க்கு
மகிழ்ச்சி தரக்களியான்
முடங்க லுருதெதி ராட்டயர் களிறு
முழக்குக சிறுபறையே
முற்படு கலைசையி லுற்பல வேழ
முழக்குக சிறுபறையே. ௪௬

வேறு

மலைவற முப்பொரு ளியல்பு தெளித்தரு
ளொரு முதலே
மலையென முற்படு வினைக ளறச்செயு
மெம துயிரே
யலையு மனத்தையு நிலையி னிறுத்திடு
மரு ளுருவே
யமிழ்தி னினித்துட லிடனு முகிழ்த்தொளிர்
சிவ விளைவே
யுலைவறு கற்பக மெனவருள் கொட்டிய
மழ களிறே
யுலக மனைத்தினி னுடலி லடக்கிய
நிறை பொருளே
கலைசையி லுற்பல விறைவ முழக்குக
சிறு பறையே
கடலொலி பிற்பட வினிது முழக்குக
சிறு பறையே. ௪௭

௰. சிறுதேர்ப் பருவம்

செக்கர்க் குரூஉமணிச் சுடிகைப் பொறிப்படச்
சேடன் சுமந் தாற்றிடுந்
திண்புடவி முழுதுங் கிளைத்தறுத் தப்புறஞ்
சென்றுதன் பகைவாழ் விட
மொக்கப் பெருந்துகள் படுத்திமோட் டாமையோ
டுடையகிணை முண்டு பல்வி
ஞெண்குடரி னுதிகவ்வி யீர்த்துரீஇச் சிவபிரா
னுகளபத மன்று தேடப்
புக்குற்ற கேழல்பல் லூழிக ளிடந்தெய்த்த
புலமெலா மொரு கணத்திற்
போந்துகி ழண்டச் சுவர்த்தலை துளைத்துப்
புறங்கோத்த நீர் சுவற்றித்
திக்கெட்டு முட்டியுல வாகுப் பரிப்பாக
சிறுதே ருருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதே ருருட்டி யருளே. ௪அ

பிறந்துளை கொடும்படை திறந்தபுண் வழிதொறு
நெருப்பெனக் குருதி பாய
நெடுங்கிரி யெனப்புரண் டார்த்துக் கடாக்கரியி
னிரையெலா மெங்கு மின்னுப்
புறந்தர விடித்தெழுக் கார்முகிற் கூட்டம்
பொரக்கிடந் தலற மள்ளர்
பொன்முடி கரங்கால் வழும்புகுடர் சோரிப்
புனன்மேன் மிதப்ப முற்றும்

பறந்தலைப் புக்குநரி கொடிகழுகு வெம்பேய்
பருந்தொடு விருந்து செய்யப்
பகைத்தகுவர் சேனைக் கடற்கிடைத் தோணியிற்
பாயுங் கொடிஞ்சி கிடுகாற்
சிறந்ததிண் டேர்பல வுருட்டும் பகட்டண்ணல்
சிறுதே ருருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதே ருருட்டி யருளே. ௨௯.

விண்ணத் தியங்கும் பசும்புரவி யேழ்பூண்ட
வில்லுமிழ் கொடிஞ்சி யந்தேர்
வீற்றிருந் தூருஞ் சுடர்ப்பருதி வானவன்
வியந்துனைக் காணுந் தொறும்
பண்ணப் பணைத்தநந் தேரினும் விசைத்தேகு
பாழிமான் றேரு மிருளைப்
பருகிக் கதிர்க்கற்றை காலுநம் மொளியின்மேம்
பட்டபே ரொளியும் வாய்ப்பத்
தண்ணற் கருங்கட லுடுக்கைத் தலத்துச்
சரிக்குமொரு பரிதிப் பிரான்
றானுகு மென்றுள்ள மருளநின் றிருமேனி
தண்பவள வொளி வீசிடத்
திண்ணப் பொலன்சகட் டவிர்மணிக் கூவிரச்
சிறுதே ருருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதே ருருட்டி யருளே. ௩௰

அலைக்குமயில் வேல்விழிக் கன்னிமைப் பருவத்
தணங்கினர் முலைக்கு நிகரா

மம்பொற் பொருப்பினைக் கோட்டினாற் கன்னிமை
யழிந்த பருவத்து மடவார்
மூலக்குநிக ராகச் செயும்பிரம சாரியே
மூதண்ட மூன்று மந்த
மூரிப் பொலஞ்சிகரி பேர்த்தெடுத் தங்கையான்
முனியென்ன வாங்கி முற்றுந்
தொலைக்குமடன் முப்புரிசை வென்றநாட் சிவபிரான்
றுண்ணென் றுகைத்த திண்டேர்த்
தொன்னிலை யழித்தக் கிரிக்குவான் பூதரச்
சொற்பெயரை நிலை பெறுத்துஞ்
சிலைக்குநிக ரொற்றையங் கோட்டுத் தனிக்களிறு
சிறுதே ருருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதே ருருட்டி யருளே. ௩௧

பெருங்கருணை சூற்கொண் டிருந்தசிவ காமிப்
பிராட்டியொர் சிதம்ப ரேசப்
பெருமா னெனப்படுங் கீர்த்தியிரு முதுகுரவர்
பேணியுனை யேக காலத்
தொருங்குமார் பத்துற வெடுத்தணைத் தொண்முத்த
முண்டுச்சி மோந்து கொள்ள
வுன்னுதோ றிருவர்களு மொற்றித்த வடிவுகொண்
டுறைபயன் பெற்று மகிழ
வருங்கட மாமதச் சிந்துரக் களபமே
மதிமுடிச் சடில மோலி
மாசுணப் பேரணிபி னங்கைக் குறுத்தாள
மதிவகிர்த் தனைய வொற்றைச்

சிருங்கனே சச்சிதா நந்தபர போகமே
சிறுதே ருருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதே ருருட்டி யருளே. ருஉ

வண்டின முழக்கமுகை விண்டலர் பசுந்துழாய்
மாலையம் படலை மார்பின்
மாயோன் கிடக்கையை யுடுக்கையென் றுண்டமட
மங்கைக்கு மகுட மான
தொண்டைமண் டலம்வாழ மகுடம் பதித்தபொற்
சுடர்மணி நிகர்த்த தொல்சீர்த்
தொட்டிக் கலைப்பதி தழைக்கவப் பதிமருவு
தூயசிவ பத்தர் வாழக்
கண்டிகையும் வெண்ணீறு மஞ்செழுத் தும்பொலிவு
காட்டவை திக மார்க்கமுங்
கரிசற்ற சைவமும் வளர்ந்தோங்க வாங்குங்
கடற்புவி மகிழ்ச்சி தூங்கத்
திண்டிமந் தாக்குங் குறட்கணஞ் சூழநீ
சிறுதே ருருட்டி யருளே
சிற்பரன் றென்கலைசை யுற்பல விநாயகன்
சிறுதே ருருட்டி யருளே. ருங

செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ்

முற்றும்.

பாட்டு முதற்குறிப்பகராதி